ALPHA MIND POWER

# NEWSLETTER



June 2017

## From Guruji's desk....



My Dear Alpha Siddhas,

Writing to you with love and blessings…

Hope your life is becoming better and better with Alpha. I am hearing from so many Alpha Siddhas about their beautiful Alpha experiences. I am humbled and feel blessed that Alpha is creating wonderful manifestations in the lives of so many people.

My thoughts also move towards the different problems I see people facing in life. One thing which is very evident is that it is not the situation which hurts but the people involved in it. It is always a human being who hurts other human beings. And the hurt is not only with words but even more with thoughts.

Working people face challenges not just with the work they have to do but with the people they have to work with. A student faces problems not only with the studies but more with the teacher or other students or even with parents. An employer faces problems not just with his business but more with the employees. Women face problems not just with their work at home and office but with the people there.

The amount of pain inflicted on a person by another person is unimaginable. Again and again I am seeing how much a person suffers just because another person is not treating him or her well.

Why are human beings hurting each other so much? Examine your own life. Are others hurting you? Are you hurting others? Why are we creating so much negativity in our lives and in the lives of others around us?

One way is to rise above the level at which it hurts. How does one do that? With regular practice of meditation the vibrations of a person change taking his consciousness to a higher level. This helps you to remain unaffected by another person's actions. This also helps to dissolve any hatred or anger within you. As a result, you will not hurt anyone with your thoughts or words.

You can also use all the methods in Alpha. You can shower colors on anyone who hurts you. Talk to his subconscious mind. Visualise that he is smiling at you. If you keep doing this diligently at Alpha, you will be able to bring about a change in the person. This is easier said than done and I am aware of it. At Alpha your true feelings surface and if a person has hurt you, anger dominates your mind. This makes it difficult for you to practice any of the techniques that you know.

Hence, it all boils down to changing ourselves before we think of changing others. Meditate regularly. Let all negativities within you dissolve. Let there be only pure thoughts within you and positive words coming from you.

Change what can be changed. Accept what cannot be changed. But meditate and rise to the level where you know the difference between the two.

Wishing you wonderful meditations and a happy and powerful mind.

Blessings,

**Srimatha**



Guruji with Alpha Siddhas at
Siddha Kundalini Workshop in Bangalore



Guruji with Alpha Siddhas at
Agnikundam workshop in Dubai

அன்புள்ள ஆல்ஃபா சித்தர்களே,
அன்புடன் ஆசியுடன் எழுதுகிறேன்.

ஆல்ஃபாவுடன் உங்கள் வாழ்க்கை மென்மேலும் சிறப்பாக இருக்கிறது என்று நம்புகிறேன். பல ஆல்ஃபா சித்தர்களிடமிருந்து அவர்களது மிக அற்புதமான ஆல்ஃபா அனுபவங்களைப் பற்றி அறிந்து வருகிறேன். எனக்கு உண்மையிலேயே மிகவும் நெகிழ்ச்சியாக இருப்பதுடன் ஆல்ஃபா உங்கள் வாழ்க்கையில் பல நல்ல விஷயங்களை உருவாக்கி தருகிறது என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

எனது எண்ணங்கள் பலர் வாழ்வில் சந்தித்து வரும் பிரச்சினைகளை நோக்கியும் செல்கின்றன. ஒரு விஷயம் மிக தெளிவாக தெரிகிறது. மனிதர்களை கஷ்டப்படுத்துவது அவர்களது சூழ்நிலை மட்டுமல்ல. அதில் சம்பந்தப்பட்டிருக்கும் மனிதர்கள் தான். ஒரு மனிதர் தான் இன்னொரு மனிதரின் மனதை புண் படுத்துகிறார். இப்படி புண் படுத்துவது என்பது வார்த்தைகளால் மட்டுமல்ல எண்ணங்களாலும் தான்.

வேலைக்குப் செல்பவர்கள் அங்கிருக்கும் வேலையால் மட்டும் சிரமப்படுவதில்லை அங்கிருக்கும் மனிதர்களால் தான் அதிகமாக பாதிக்கப் படுகிறார்கள். ஒரு மாணவருக்கு பிரச்சினை படிப்பினால் மட்டுமில்லை, அங்கிருக்கும் ஆசிரியர்கள், சக மாணவர்கள், ஏன், பெற்றோர்களும் கூடத் தான். ஒரு தொழிலதிபரின் பிரச்சினை அவரது தொழிலால் மட்டுமல்ல அவரிடம் வேலை செய்பவர்களால் தான் அதிகமாக இருக்கிறது. பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகள் வீட்டிலும் அலுவலகத்திலும் இருக்கும் வேலையினால் மட்டுமல்ல அங்கிருக்கும் மனிதர்களால் தான்.

ஒரு மனிதரால் இன்னொரு மனிதரின் மீது சுமத்தப்படும் வலி நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு இருக்கிறது. ஒருவர் தன்னிடம் சரியானபடி நடந்து கொள்ளாதலால் இன்னொருவர் எவ்வளவு நொந்து போகிறார் என்பதை நான் அடிக்கடி பார்த்து வருகிறேன்.

மனிதர்கள் ஏன் இப்படி ஒருவரை ஒருவர் நோகடிக்கிறார்கள்? உங்கள் வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பாருங்கள். யாரேனும் உங்கள் மனதில் வலியை உண்டாக்குகிறார்களா? நீங்கள் யார் மனதிலேனும் வலியை ஏற்படுத்துகிறீர்களா? நாம் எதற்காக நம் வாழ்விலும் நம்மை சுற்றி இருப்பவர்கள் வாழ்விலும் இவ்வளவு துன்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்?

ஏன் இப்படி நடக்கிறது என்று கேட்பதை விட்டு அந்த துன்பத்தை எப்படி மாற்றுவது என்று பார்ப்போம். ஒரு வழி இருக்கிறது. இதெல்லாம் நம்மை துன்புறுத்தும் நிலையை விட்டு நாம் சற்று மேலே வர வேண்டும். அதை எப்படி செய்வது? தொடர்ந்து தியானம் செய்து வருவதால் ஒருவரது அதிர்வுகள் மாறுவதால் அவரது உணர்வின் நிலையும் மாறுகிறது. இப்படி மாறும் பொழுது மற்றவர்களின் நடவடிக்கைகள் சற்றும் பாதிக்காத நிலையில் இருக்க முடியும். இதனால் உங்களுக்குள் இருக்கக்கூடிய வெறுப்பு மற்றும் கோபமும் கரைந்து விடும். நீங்கள் யாரையும் உங்கள் எண்ணங்களாலோ வார்த்தைகளாலோ நோகடிக்கவும் மாட்டீர்கள்.

அத்துடன் ஆல்ஃபாவில் உள்ள வழிமுறைகளையும் நீங்கள் பயன்படுத்தலாம். உங்களை வேதனைப்படுத்தும் நபரின் மீது நிறங்கள் செலுத்துங்கள். அவரது ஆழ்மனதுடன் பேசுங்கள். அவரது முகத்தில் புன்னகையை பாருங்கள். இதை ஆல்ஃபாவில் தொடர்ந்து செய்து வந்தால் நிச்சயம் அவரிடம் ஒரு நல்ல மாற்றத்தை உங்களால் கொண்டு வர முடியும். இதை சொல்வது சுலபம் செய்வது கடினம். அதை நான் அறிவேன்.

ஆல்ஃபா நிலையில் உங்கள் அடிமனதில் உள்ள உணர்வுகள் தான் தலை தூக்கும். யாரேனும் உங்களை வேதனைப் படுத்தி இருந்தால் உங்கள் மனதில் கோபம் மட்டுமே தலை தூக்கும். இதனால் மேற்சொன்ன எதையுமே செய்வது கூட கடினமாக இருக்கலாம்.

ஆக கடைசியாக பார்க்கப் போனால் மற்றவர்களிடம் மாற்றத்தை கொண்டு வருவதை விட உங்களிடம் மாற்றம் கொண்டு வருவது தான் அவசியமாகிறது. தொடர்ந்து தியானம் செய்து வாருங்கள். உங்களுக்குள் உள்ள எதிர்மறை எண்ணங்களும் உணர்வுகளும் கரைந்து விடட்டும். உங்களுக்குள் நல்ல சக்தி மட்டுமே நிறைந்திருக்கட்டும். உங்களிடமிருந்து வரும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் நல்ல வார்த்தைகளாகவே இருக்கட்டும்.

வாழ்க்கையில் மாற்ற முடிந்ததை மாற்றுங்கள். மாற்ற முடியாததை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் தியானம் பழகி இவை இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ளும் நிலைக்கு நீங்கள் உயருங்கள்.

உங்கள் தியானங்கள் சிறப்பாக இருக்கட்டும். உங்கள் மனம் சந்தோஷமாகவும் சக்தி வாய்ந்ததாகவும் இருக்கட்டும்.

ஆசீர்வாதங்கள்,

**ஸ்ரீமாதா**




**FIRST TIME IN MALAYSIA !**
**ALPHA MIND POWER WORKSHOP**

| | |
|---|---|
| 16.07.2017: | 9 am to 5 pm |
| Class: | LEVEL-1 |
| Language: | English |
| Venue: | Holiday Inn Hotel Kuala Lumpur Glenmarie, Malaysia. |
| Contact: | +6010 2222370 |

**Inform your contacts in Malaysia to make use of this opportunity.**

For details contact: +919841272146

**மலேஷியாவில் முதல் முறையாக**
**ஆல்ஃபா மைண்ட் பவர் வகுப்பு**

| | |
|---|---|
| 16.07.2017: | 9 am முதல் 5 pm வரை |
| வகுப்பு: | கட்டம் –1 |
| மொழி: | ஆங்கிலம் |
| இடம்: | ஹாலிடே இன் ஹோட்டல் கோலாலம்பூர், க்லென்மாரீ, மலேஷியா |
| தொடர்பு எண்: | +6010 2222370 |

**இந்த தகவலை மலேஷியாவில் உள்ள உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு தெரிவித்து அனைவரும் பயனடையச் செய்யவும்**

மேலும் விவரங்களுக்கு : +91 9841272146




Before I attended Alpha classes I always had negative thoughts. There were too many quarrels in my family. We were always shouting at each other. Someone or the other was falling sick. It was only after I attended Psychic Energy class that I understood the concept of energy. I used all the methods taught by Guruji in that class to improve the energy of my house. Today, we are all living much more peacefully. There is more love and good health in my family. We are ever grateful to Guruji for teaching us such simple ways to make our lives better. ***Shanthi, Madurai.***

ஆல்ஃபா வகுப்பில் கலந்து கொள்வதற்கு முன் எனக்கு எப்பொழுதும் தீய எண்ணங்களே அதிகமாக இருந்தன. குடும்பத்தில் பல சண்டைகள். ஒருவர் இன்னொருவரை சாடிக் கொண்டே இருப்போம். எப்பொழுதும் யாராவது நோய் வாய் பட்டிருப்பார்கள். சைக்கிக் எனர்ஜி வகுப்பில் கலந்து கொண்ட பிறகு தான் சக்தி என்ற விஷயம் எனக்கு புரிந்தது. குருஜி வகுப்பில் சொல்லிக் கொடுத்த பல முறைகளை கையாண்டு எனது வீட்டின் சக்தியை அதிகரிக்க செய்தேன். இன்று நாங்கள் மிகவும் நிம்மதியாக வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். எங்கள் வீட்டில் அன்பும் ஆரோக்கியமும் இன்று நிறைந்திருக்கிறது. வாழ்க்கையை மேம்படுத்தும் இத்தனை எளிய வழிமுறைகளை கற்றுத்தந்த குருஜிக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

**சாந்தி, மதுரை.**

I was very curious to know about kundalini shakthi. People had given me various opinions about it. But, after attending Siddha Kundalini class all the fears disappeared from my mind. The explanation about karma in that class cleared many things in my mind. Today I am enjoying Kundalini meditation so much. In fact, it has made my manifestations also more easy. Thanks Srimatha!

***Saraswathy, Bengaluru.***

குண்டலினி சக்தியைப் பற்றி தெரிந்த கொள்ள வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. அதைப்பற்றி பலர் பல விதமாக சொல்லியிருந்தார்கள். ஆனால் சித்த குண்டலினி வகுப்பில் கலந்து கொண்ட பிறகு என் மனதில் இருந்த பயங்கள் அத்தனையும் நீங்கி விட்டன. கர்மாவைப் பற்றி அந்த வகுப்பில் கொடுக்கப்பட்ட விளக்கம் என் மனதில் இருந்த பல சந்தேகங்களுக்கு விடை அளித்தது. இன்று நான் குண்டலினி தியானத்தை அனுபவித்து பயிற்சி செய்து வருகிறேன். சொல்லப் போனால் எனது இலட்சியங்கள் கூட இப்பொழுது மிக சுலபமாக நிறைவேறுகின்றன. நன்றி ஸ்ரீமாதா! **சரஸ்வதி, பெங்களூரு**

I attended Alpha level 1 in 2012. I practised for some time and then somehow could not pursue the same. My life took many turns and I became quite depressed. My entire family became depressed because of my condition. I could not even go to work. Suddenly one day I remembered Alpha and attended level 2. Wow! So many cobwebs got cleared from my mind. Today, I am practising meditation regularly. What medicine could not do for my mind, Alpha meditation has done. I am a happy person with more energy than ever before. I am now eager to attend all the higher levels and take my life to great heights. Thanks to Guruji and AMP Team!

***Shailaja, Chennai***

நான் 2012ல் ஆல்ஃபா வகுப்பில் கலந்து கொண்டேன். சில நாட்கள் மட்டும் பயிற்சி செய்தேன். பிறகு விட்டு விட்டேன். வாழ்வில் பல இடர்களை சந்தித்தேன். மனதளவில் மிகவும் பாதிக்கப் பட்டேன். என் நிலையை பார்த்து எனது குடும்பமே சோகத்தில் ஆழ்ந்தது. என்னால் வேலைக்கும் போக முடியவில்லை. திடீரென்று ஒரு நாள் ஆல்ஃபா ஞாபகம் வந்தது. இரண்டாம் கட்டத்தில் கலந்து கொண்டேன். ஆஹா! என் மனதில் இருந்த பல சிலந்தி வலைகள் களையப்பட்டன. இன்று நான் தினமும் தியானம் செய்கிறேன். மருந்துகளால் என் மனதிற்கு தர முடியாத நிம்மதியை ஆல்ஃபா கொடுத்தது. நான் சந்தோஷமாகவும் முன்பை விட அதிக சக்தியுடனும் இருக்கிறேன். இனி தொடர்ந்து எல்லா கட்டங்களிலும் கலந்து கொண்டு எனது வாழ்க்கையை அடுத்த கட்டத்தை நோக்கி கொண்டு செல்லப் போகிறேன். குருஜிக்கும் AMP டீமிற்கும் எனது மனமார்ந்த நன்றி!

**சைலஜா, சென்னை**

I attended Shantagni class at Rishikesh. Thanks to Srimatha. Till date I feel so refreshed. My friends are all asking me how my face is glowing so much. I only want this to last forever. Now, I see a lot of changes within me in talking with others. My daily meditations are much better. My mind is so light now. Thanks again Guruji!

***Rani Maheswari, Salem***

ரிஷிகேஷில் சாந்தக்னி வகுப்பில் கலந்து கொண்டேன். ஸ்ரீமாதாவிற்கு நன்றி. இன்று வரை புத்துணர்வுடன் இருக்கிறேன். என் முகம் எப்படி இப்படி பொலிவுடன் இருக்கிறது என்று எனது தோழிகள் எல்லோரும் கேட்கிறார்கள். இது என்றும் நிலைத்தாலே எனக்கு போதும். மற்றவர்களுடன் பேசுவதில் என்னிடம் நிறைய மாற்றங்கள் பார்க்கிறேன். எனது அன்றாட தியானங்கள் மிகவும் சிறப்பாக இருக்கின்றன. எனது மனமே மிகவும் லேசாக இருக்கிறது. மீண்டும் நன்றி குருஜி!

**ராணி மகேஷ்வரி, சேலம்**

My mother’s US visa was rejected 3 times. But after attending Shantagni at Rishikesh and also Babaji cave visit, she got the visa for 10 years. Thanks to Srimatha for taking so much efforts to take us to Rishikesh and make us meditate there. Rishikesh is indeed a Dev Bhoomi. Thank you very much!

***Sripriya Satish, Coimbatore***

எனது தாயின் US விசா 3 முறை நிராகரிக்கப்பட்டது. ஆனால் ரிஷிகேஷில் சாந்தக்னி மற்றும் பாபாஜி குகை யாத்திரை முடித்த பிறகு அவருக்கு 10 வருடங்களுக்கு விசா கிடைத்து விட்டது. நம்மை மிகுந்த கவனத்துடன் அழைத்து சென்று ரிஷிகேஷில் தியானம் செய்ய வைத்த ஸ்ரீமாதாவிற்கு நன்றி! ரிஷிகேஷ் உண்மையிலேயே ஒரு தேவபூமி தான். மிக்க நன்றி!

**ஸ்ரீப்ரியா சதீஷ், கோவை**

Before Shantagni I was addicted to mobile games. But now, Im not even opening the apps. I am very very happy about this… ***Viji Raja, Mumbai.***

சாந்தக்னிக்கு முன்னர் எனக்கு மொபைல் கேம்ஸ் விளையாடுவதில் ஒரு பைத்தியம் இருந்தது. ஆனால் இப்பொழுது எந்த ஆப்பையும் நான் திறப்பது கூட இல்லை. இதுவே எனக்கு பெரிய சந்தோஷம் தான்.

**விஜி ராஜா, மும்பை**

(For further feedback pl read testimonials on our website)

(மேலும் பல ஆல்ஃபா அனுபவங்களை நமது இணையதளத்தில் காணலாம்)

***Guruji's TV programs are telecast in these channels. Don't miss them!***

**MAKKAL TV**

Saturday 9:00 AM

**POTHIGAI TV**

Monday 1:30 PM

***Recordings of the programs can be viewed on our website www.alphamindpower.net***

***AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Send us a whatsapp message on +917358595493 to get connected***

AMP பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குரூப்பில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து +917358595493 என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குரூப்பில் இணைக்கப்படுவீர்கள்

**Face book link:** https://www.facebook.com/groups/alphamindpower/



## AMP Classes Schedule

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Chennai (Tamil) | Spiritual Counseling | 03/06/17<br>04/06/17 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Alpha Mind Power Office, No.4, Abusali Street, Saligramam, Chennai - 93 |
| Chennai (Tamil) | Level – 2<br>Level – 3<br>Siddha Kundalini<br>Psychic Energy<br>Level – 1 | 07/06/17<br>08/06/17<br>09/06/17<br>10/06/17<br>11/06/17 | Wed<br>Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Trichy (Tamil) | Level – 2<br>Level – 3<br>Amrut Siddhi<br>Level – 1 | 06/07/17<br>07/07/17<br>08/07/17<br>09/07/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Breeze Residency, 3/14, McDonalds Road, Trichy |
| Malaysia (English) | Level – 1 | 16/07/17 | Sun | 9am to 5pm | Holiday Inn Hotel Kuala Lumpur Glenmarie, Malaysia. |
| Chennai (Tamil) | Level – 2<br>Level – 3<br>Srividya<br>Level – 1 | 20/07/17<br>21/07/17<br>22/07/17<br>23/07/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Coimbatore (Tamil) | Level – 2<br>Level – 3<br>Siddha Kundalini<br>Psychic Energy<br>Level – 1 | 26/07/17<br>27/07/17<br>28/07/17<br>29/07/17<br>30/07/17 | Wed<br>Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Regent, 708, Avinashi Road, Coimbatore |

NOTE: Please call & register with AMP office before attending any of the workshops

*Printed & Published for*

ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"

*Dr. Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai – 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

*PRINTED MATERIAL*